

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு (6.1.2024) அன்று சென்னை, கிண்டி, மெட்ராஸ் ரேஸ் கோர்ஸ் மைதானத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டையொட்டி நடைபெற்ற "கலைஞர் – கலைஞர் 100 திரைத்துறையின் மாபெரும் கலை விழாவில், தமிழ்நாடு திரைப்பட தயாரிப்பாளர்கள் சங்கத்தின் சார்பில் அதன் நிர்வாகிகள் நினைவுப் பரிசு வழங்கினார்கள். இவ்விழாவில், நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த், கலைஞானி கமல்ஹாசன், முன்னணி நடிகர்கள், நடிகர் சிவ ராஜ்குமார், தென்னிந்திய நடிகர் சங்கத்தின் துணைத் தலைவர் பூச்சி முருகன், தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்கத் தலைவர் முரளி ராமநாராயணன், செயலாளர்கள் ஆர். ராதாகிருஷ்ணன் மற்றும் எஸ். கதிரேசன், திரைப்பட இயக்குநர்கள், தயாரிப்பாளர்கள், நடிகர்கள், நடிகைகள், திரைத்துறையின் பல்வேறு சங்கங்களின் நிர்வாகிகள், திரைப்பட விநியோகஸ்தர்கள், திரையரங்க உரிமையாளர்கள், திரைப்படத் துறையின் தொழில்நுட்ப கலைஞர்கள் மற்றும் தொழிலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### இசையமைப்பாளர்

# ஏ.ஆர்.ரகுமான் பிறந்த நாள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!



**சென்னை, ஜன. 8-**

**இசையமைப்பாளர் ஏ.ஆர். ரகுமானுக்கு நேற்று முன்தினம் பிறந்த நாளாகும். இந்நாளில் அவருக்கு வாழ்த்துத் தெரிவித்து வலைதளங்களில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செய்தி வெளியிட்டுள்ளார்.**

அச்செய்தியில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளதாவது:-

இசையால் உலகையும் உள்ளங்களையும் வென்று, என்றும் அன்பின் பாதையில் பயணிக்கும் தமிழ்ப்புயல் ஏ.ஆர்.ரஹ்மான் அவர்களுக்கு என் பிறந்தநாள் வாழ்த்துகள்.

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (6.1.2024) சென்னை, கிண்டி, மெட்ராஸ் ரேஸ் கோர்ஸ் மைதானத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டையொட்டி நடைபெற்ற "கலைஞர் கலைஞர் 100 திரைத்துறையின் மாபெரும் கலை விழாவில் கலந்து கொண்டு, தலைமை உரையாற்றினார். இவ்விழாவில், நீர்வளத் துறை அமைச்சர். துரைமுருகன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், சூப்பர் ஸ்டார். ரஜினிகாந்த், கலைஞானி கமல்ஹாசன், முன்னணி நடிகர்கள், நடிகர் சிவ ராஜ்குமார், தென்னிந்திய நடிகர் சங்கத்தின் துணைத் தலைவர். பூச்சி முருகன், தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்கத் தலைவர்.முரளி ராமநாராயணன், செயலாளர்கள். ஆர். ராதாகிருஷ்ணன் மற்றும் எஸ். கதிரேசன், திரைப்பட இயக்குநர்கள், தயாரிப்பாளர்கள், நடிகர்கள், நடிகைகள், திரைத்துறையின் பல்வேறு சங்கங்களின் நிர்வாகிகள், திரைப்பட விநியோகஸ்தர்கள், திரையரங்க உரிமையாளர்கள், திரைப்படத் துறையின் தொழில்நுட்ப கலைஞர்கள் மற்றும் தொழிலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### சென்னையில் ஜன.9, 10 தேதிகளில்

# உலகத் தமிழர் பொருளாதார மாநாடு!

## அமைச்சர் துரைமுருகன் தொடங்கி வைக்கிறார்!

சென்னை, ஜன.8-

பத்தாவது உலகத் தமிழர் பொருளாதார மாநாடு சென்னையில் வரும் 9 மற்றும் 10 ஆம் தேதிகளில் நடைபெறவுள்ளது.

இது குறித்து சென்னை வளர்ச்சிக் கழகத்தின் நிறுவனத் தலைவர் வி.ஆர். எஸ்.சம்பத், உலகத் தமிழர் பொருளாதார மாநாட்டின் வரவேற்பு கமிட்டி தலைவர் வி.ஜி. சந்தோசம் ஆகியோர் சென்னையில் வெள்ளிக்கிழமை செய்தியாளர்களிடம் கூறியதாவது:

சென்னையில் பத்தாவது உலக தமிழர் பொருளாதார மாநாடு, கிண்டியில் உள்ள லீராயல்மெரீடியன் ஹோட்டலில் ஜன.9 மற்றும் 10 ஆகிய தேதிகளில் நடைபெறவுள்ளது. மாநாட்டை அமைச்சர் துரைமுருகன் தொடங்கி வைக்கிறார். அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமை தாங்குகிறார். அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன், செஞ்சி மஸ்தான், டி.ஆர். பி.ராஜா மற்றும் புதுவை அமைச்சர்கள் ஏ.நமச்சிவாயம், க.லட்சுமி நாராயணன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த மாநாட்டில் உலகம் முழுவதுமுள்ள தொழிலதிபர்கள், தொழில் முனைவோர், சுய தொழில் புரிபவர்கள், ஆராய்ச்சியாளர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் வருகை தரவுள்ளனர்.

வணிக வளர்ச்சி, முதலீட்டு பொருளாதார வாய்ப்புகள், வளர்ச்சிக்காக தொழில் முனைவோர்களுடன் தொழில் குறித்த தகவல்களை பகிர்ந்து கொள்ளுதல், உலகளாவிய கூட்டுறவை ஏற்படுத்துதல் உள்ளிட்டவை குறித்தும் மாநாட்டில் விவாதிக்கப்படவுள்ளது. சிறப்பு வாய்ந்த பேச்சாளர்களும் இதில் கலந்து கொண்டு பேசவுள்ளனர்.

மேலும், தமிழகத்தில் தொழில் தொடங்கவும், இங்குள்ள வணிக வாய்ப்புகள் குறித்து விவாதிப்பது என மொத்தம் 12 தனித்தனி அமர்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இறுதி நாளில் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன. விழாவில் புகழ்பெற்ற தமிழர்களுக்கு உலகத்தமிழர் மாமணி விருதும் வழங்கப்படும். இது குறித்த கூடுதல் தகவல்களை https://economicconference.com என்ற இணையதள முகவரியில் தெரிந்து கொள்ளலாம் என்று தெரிவித்தனர்.

முன்னதாக, உலகத் தமிழர் மாநாடு குறித்த தகவல்கள் அடங்கிய புத்தகம் வெளியிடப்பட்டது.

### நெம்மேலியில் ரூ.1516.82 கோடியில் அமைக்கப்பட்டுள்ள

# கடல் நீரை குடிநீராக்கும் நிலையம் விரைவில் தொடங்கப்படும்!

## அமைச்சர் கே.என்.நேரு ஆய்வு செய்த பின் பேட்டி!

சென்னை, ஜன. 8 -

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களால் நெம்மேலியில் ரூ.1516 கோடியே 82 இலட்சம் மதிப்பீட்டில் சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் அமைக்கப்பட்டுவரும் நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல் நீரை குடிநீராக்கும் நிலையத்தின் செயல்பாடுகள் விரைவில் தொடங்கி வைக்கப்பட உள்ளது என்று நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு தகவல் தெரிவித்துள்ளார்.



நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என். நேரு நேற்று (6.01.2024) சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் சார்பில் ரூ.1516 கோடியே 82 இலட்சம் மதிப்பீட்டில் நெம்மேலியில் அமைக்கப்பட்டுவரும் நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் நிலையத்தின் நிறைவு கட்டப் பணிகளை ஆய்வு செய்தார்.

பின்னர், நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்ததாவது:

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கான குடிநீர், பூண்டி, சோழவரம், புழலேரி, கண்ணன்கோட்டை தேர்வாய்கண்டிகை, செம்பரம்பாக்கம், வீராணம் ஆகிய ஏரிகள் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. பருவ மழை பொய்க்கும் காலங்களில் நகரின் நீண்ட கால குடிநீர்த் தேவை மற்றும் மக்களின் அன்றாட குடிநீர் தேவையைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு அரசு கடல்நீரை குடிநீராக்கும் நிலையங்களை அமைத்துள்ளது.

அதனடிப்படையில், முதன்முதலாக தமிழ்நாட்டில் மீஞ்சூர் காட்டுப்பள்ளியில் நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 2010 ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டது. இந்நிலையில், 23.02.2010 அன்று நெம்மேலியில் அன்றைய துணை முதலமைச்சரான முதலமைச்சர் அவர்கள் ரூ.805 கோடியே 8 லட்சம் மதிப்பீட்டில் நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட இரண்டாவது கடல்நீரை குடிநீராக்கும் நிலை யத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள். இப்பணிகள் முடிக்கப்பட்டு மக்கள் பயன் பெறும் வகையில் தினசரி குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

இதனைத் தொடர்ந்து, நெம்மேலியில் ரூ.1516 கோடியே 82 இலட்சம் மதிப்பீட்டில் நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கடல் நீரை குடிநீராக்கும் நிலையம் அமைப்பதற்கான பணிகள் தொடங்கப்பட்டு, தற்போது அனைத்து பணிகளும் நிறைவு கட்டத்தை எட்டியுள்ளது. கடல்சார் பணிகள், இயந்திரவியல் மற்றும் மின்சாரம் கருவிகள் நிறுவும் பணிகள் அனைத்தும் நிறைவு செய்யப்படும் தருவாயில் உள்ளது. மேலும், கடல்நீரை நிலையத்திற்கு உள் கொணரும் குழாய் மற்றும் நிராகரிக்கப்பட்ட உவர்நீரை கடலுக்கு வெளியேற்றும் குழாய் (Offshore works; Intake and Outfall Pipeline works), கடல் நீரை உள் வாங்கும் ஆழ்நிலை நீர்த்தேக்கத் தொட்டி (Seawater Intake Sump) காற்ற ழுத்தம் மூலம் எண்ணெய் மற்றும் கசடுகளை அகற்றும் தொட்டி (Dissolved Air Flotation), வடிகட்டப்பட்ட கடல் நீர்த்தேக்கத் தொட்டி (Clarified Water Tank), வடிகட்டப்பட்ட கடல்நீர் உந்து நிலையம் (Clarified Water Pumping Station) என இந்நிலையத்தில் மொத்தம் உள்ள 23 அலகுகளில் அனைத்து பணிகளும் நிறைவடையும் தருவாயில் உள்ளது.

இந்நிலையத்திலிருந்து பெறப்படும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை, பொது மக்களுக்கு விநியோகம் செய்யும் பொருட்டு, 48.10 கி.மீ நீளத்திற்கு குழாய் பதிக்கும் பணிகள் மற்றும் சோழிங்கநல்லூரில் இடைநிலை நீரேற்று நிலையம் அமைப்பதற்கான அனைத்து கட்டுமானப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்நிலையத்திலிருந்து பெறப்படும் குடிநீர், தென் சென்னை பகுதிகளான வேளச்சேரி, ஆலந்தூர், புனிததோமையார் மலை, மேடவாக்கம், கோவிலம்பாக்கம், நன்மங்கலம், கீழ்கட்டளை, மூவரசன்பேட்டை, சோழிங்கநல்லூர், உள்ளகரம்புழுதிவாக்கம், மடிப்பாக்கம். தாம்பரம் மாநகராட்சிக்குட்பட்ட பல்லாவரம் மற்றும் பழைய மகாபலிபுரம் சாலை(OMR)ல் அமைந்துள்ள தகவல் தொழில் நுட்ப நிறுவனப் பகுதிகளில் உள்ள 9 இலட்சம் மக்கள் பயனடைவார்கள். இந்நிலையத் தின் இயக்குதலுக்கான ஒப்புதல் (Consent to operate) தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தால் வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையத்தின் அனைத்து கட்டுமானப் பணிகளும் நிறைவு செய்யப்படும் தருவாயில் உள்ளது. சோதனை ஓட்டம் தொடங்கப்பட்டு தொடர்ந்து கண்காணிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் நிலையத்தின் செயல்பாடுகள் விரைவில் தொடங்கி வைக்கப்படும் என நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இவ்வாய்வின்போது, அரசு முதன்மைச் செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, முனைவர் தா.கார்த்திகேயன், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், செயல் இயக்குநர் செ.சரவணன், பொறியியல் இயக்குநர் மி.ஜெய்கர் ஜேசுதாஸ், தலைமைப் பொறியாளர் ஆர்.கந்தசாமி மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# பொங்கல் பரிசு தொகுப்புடன் ஆயிரம் ரூபாய்!

## அரசு முடிவுக்கு இந்திய கம்யூனிஸ்ட் இரா.முத்தரசன் வரவேற்பு!

சென்னை, ஜன. 8-

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயலாளர் இரா. முத்தரசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



கடந்த 2023 டிசம்பர் மாதம் மிக் ஜாம் புயல் தென் மாவட்டங்களில் பெய்த பெருமழை என இயற்கை பேரிடர் பாதிப்புகளை எதிர்கொண்ட தமிழ்நாடு அரசு பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண நிதியும், மறு வாழ்வுக்கான உதவிகளும் செய்து வருகிறது.

கடுமையான இயற்கை பேரிடர் பாதிப்புகளில் இருந்து மீளவும், மறு வாழ்வு பெறவும் ஒன்றிய அரசு 37 ஆயிரத்து 907 கோடியே 19 லட்சம் ரூபாய் பேரிடர் நிவாரண நிதி வழங்க வேண்டும் என வலியுறுத்தி வரும் நிலையில், பா.ஜ.க. ஒன்றிய அரசு, இயல்பான காலத்தில் வழக்கமாக வழங்கப்படும் மாநில பேரிடர் நிதி தவிர வேறு நிதி தராமல் வஞ்சித்து வருகிறது.

இந்த நிலையில் கடந்த 03.01. 2024 ஆம் தேதி தமிழ்நாடு அரசு அறிவித்த பொங்கல் பரிசு தொகுப்பில் ரொக்கப் பணம் இடம் பெறவில்லையே என கேள்வி எழுந்தது. இது குறித்து இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி உட்பட அரசியல் கட்சிகளும் அமைப்புகளும் பொங்கல் பரிசு தொகுப்பில் பணம் இடம் பெற வேண்டும் என கோரிக்கை வைத்தன. ஜனநாயக உணர்வு கொண்ட மாநில அரசு, கடுமையான நிதி நெருக்கடிக்கு மத்தியிலும் பொங்கல் பரிசாக ரூ.1000/= (ஆயிரம்) அறிவித்திருப்பதற்கு இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் மாநில செயற்குழு நன்றி பாராட்டி வரவேற்கிறது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



சென்னை மெரினா கடற்கரை கலங்கரை விளக்கம் அருகில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு துறை மற்றும் டி.ஜி. வைஷ்னவ கல்லூரி தொடர்பியல் துறையுடன் இணைந்து கடந்த ஒரு வருடத்தில் விளையாட்டு துறையில் நடைபெற்ற பல்வேறு நிகழ்வுகளின் விபரங்கள் உள்ளடக்கிய கையேட்டை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில் மேயர் ஆர் பிரியா, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்யா மிஸ்ரா. நாடாளுமன்ற உறுப்பினர்கள்.தயாநிதி மாறன், டாக்டர் கலாநிதி வீராசாமி, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர்.ஜெ.மேகநாத ரெட்டி, கூடைப்பந்து வீரர் ஜீவானந்தம், வாள்வீச்சு வீராங்கனை மரியா அக்ஷிதா உடனிருந்தனர்.



ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ரூ.1.17 மதிப்பீட்டிலான புதிய திட்டப்பணிகளை வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார். நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜகோபால் சுன்கரா, மாநகராட்சி மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் ஈவிகேஎஸ்.இளங்கோவன், மாநகராட்சி ஆணையாளர் வி.சிவகிருஷ்ணமூர்த்தி, மாநகர;க கழகச் செயலாளர் மு.சுப்பிரமணியம், துணை மேயர் வி.செல்வராஜ், மண்டல தலைவர்கள் ப.க.பழனிசாமி, காட்டு சுப்பு, மாமன்ற உறுப்பினர் தமிழ்ப்பிரியன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.